சுற்றறிக்கை இலக்கம் - **PRE/2024/56**

**TR -12**

எனது இல :- TR/PRE/CIR/2024
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை, ராஜகிரிய.
2024.09.09 ஆம் திகதி.

அனைத்துப் போக்குவரத்து சுற்றறிக்கைகளதும் பொழிப்பான பிரதான சுற்றறிக்கை

**அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள்,**
**பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள்,**

**சனாதிபதித் தேர்தல் - 2024.09.21**
**போக்குவரத்து அலுவல்கள்.**

2024.09.21 ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலுக்கான பூர்வாங்கத் தேவைகளுக்காகவும் வாக்களிப்பு நிலையங்களின் பணியாட் குழுவினரை போக்குவரத்துச் செய்வதற்காகவும் கணிசமானளவு வாகனங்கள் உங்களுக்குத் தேவைப்படலாம். மேற்படி வாகனங்களுக்குத் தேவையான எரிபொருட்களை வழங்குவதற்காகவும் சாரதிகளுக்கு மேலதிக வேலை நேரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காகவும், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்களுக்குரிய வாடகையை கொடுப்பனவு செய்வதற்காகவும், பாரிய தொகையொன்று செலவாகும். எனவே மேற்படி செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்காக பின்வரும் ஆலோசனைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

## 02. அரச வாகனங்களைப் பயன்படுத்தல்.

02.(i) தேர்தலோடு தொடர்புடைய பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதியளிக்கும் பொருட்டு அரச வாகனங்களை மாத்திரம் பயன்படுத்திக் கொள்ளவும். மேற்படி வாகனங்களுக்குத் தேவையான எரிபொருட்களுக்காக தேர்தல்கள் செலவுத் தலைப்பின் கீழ் செலவுகளைச் செய்ய முடியுமாகவிருப்பதுடன், சாரதிகளின் இணைந்த படிகள், மேலதிக நேரப் படிகளை என்னால் அங்கீகரிக்கப்படும் வரையறைகளின் கீழ் செலுத்த முடியும். **பாரிய பழுதுபார்ப்புக்களுக்கு செலவுசெய்ய வேண்டியுள்ள வாகனங்களை இந்தத் தேர்தல் அலுவல்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது.**

02. (ii) உத்தியோகபூர்வ வாகனங்களுக்கான உரிமையைக் கொண்டுள்ள தலைமை வாக்கெண்ணல் அலுவலர்/ உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு தமது அலுவலகத்திலிருந்து/ வீட்டிலிருந்து குறிப்பிட்ட மாவட்டத்திற்கு செல்வதற்காக, **அந்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் முன்னனுமதியின் கீழ் தனது உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.** அந்த அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு V-6 படிவத்தைப் பயன்படுத்தவும். அந்த அனுமதியின் கீழ் **தனது உத்தியோகபூர்வ வாகனத்தை எடுத்துச் செல்லும் அலுவலர்கள் குறிப்பிட்ட மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரது அலுவலகத்திற்கு செல்ல வேண்டிய தூரத்திற்குத் தேவையான எரிபொருளை தமது சொந்தப் பணத்திலிருந்து பெற்று உரிய பற்றுச்சீட்டுக்களை தேர்தல் அலுவலகத்திற்கு சமர்ப்பித்ததன் பின்னர் அத்தொகை மீளச் செலுத்தப்படும்.** இதற்கு AV-01 பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும். இந்த வாகனத்தைச் செலுத்துவதற்கு அரச சேவை சாரதியொருவரை ஈடுபடுத்திக்கொள்ளல் வேண்டும். சாரதியின் வருகை சான்றிதழாக **CE-51** அச்சிடப்பட்ட படிவத்தை தேர்தல் கடமைகளுக்காக வாகனங்களைக் கொண்டுசெல்லும் அனைத்து சாரதிகளுக்கும் வருகை சான்றிதல்களை வழங்குவதற்கு போக்குவரத்து அலுவல்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தமது மாவட்டத்திற்குத் தேவையான **CE-51** அச்சிடப்பட்ட படிவங்களின் எண்ணிக்கையை நேரகாலத்துடன் தேர்தல்கள் செயலகத்தின் கணக்காளர் (பெறுகைகள்) மூலம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலதிகத் தகவல்களுக்கு இல. **PE/2024/48** மற்றும் **2024.08.26** ஆம் திகதிய சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

02. (iii). தனது மாவட்டத்தின் மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் அரசாங்க வாகனங்களுக்கு (ஒதுக்குக் குழாம் வாகனங்கள்) குறிப்பிட்ட மாவட்டத் தேர்தல் அலுவலகங்களினால் எரிபொருள் மீளளிப்புச்செய்ய வேண்டுமென்பதுடன் கொழும்பு ஒதுக்குக் குழாமிலிருந்து அரசாங்க வாகனங்களுக்கு மாத்திரம் தேர்தல் செயலகத்தினால் எரிபொருள் மீளளிப்புச் செய்யப்படும். **இதற்காக PV-01 படிவத்தைப் பயன்படுத்துதல் வேண்டும்.**

**03. தனிப்பட்ட வாகனங்களில் பிரயாணம் செய்வதற்காக மைல் கூலியைச் செலுத்தல்.**

03.(i). இந்தத் தேர்தலின் பூர்வாங்க ஏற்பாடுகளுடன் தொடர்பான போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தக் கூடாதென அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படல் வேண்டும்.

03 (ii). **அறிவுறுத்தல் வகுப்புக்களில் பங்குபற்றுதல்.**

03.**(ii)** (1) அறிவுறுத்தல் வகுப்புக்களில் பங்குபற்றுவதற்கு அழைக்கப்படும் அலுவல்களுக்கு தாபன விதிக் கோவைக்கமைய மைல் கூலியைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை இருப்பின் தனது தனிப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் அதற்காக தாபனவிதிக்கோவையின் **XIV** ஆவது அத்தியாயத்தில் **8:2** உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பெற்றோல் வாகனமாயின் ஒரு கிலோ மீற்றருக்கு **ரூ.12/=** மற்றும் டீசல் வாகனமாயின் ஒரு கிலோ மீற்றருக்கு **ரூ.8/=** என்ற ரீதியில் மைல் கூலியைப் பெற்றுக்கொள்ள முடியும். அறிவுறுத்தல் வகுப்புக்களுக்கு தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு **அறிவுறுத்தல் வகுப்புக்களுக்கு அழைப்பு விடுத்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் மாத்திரமே மைல் கூலி செலுத்தப்படும்.** தமது கடமை நிலையங்கள் ஊடாக மைல் கூலியைக் கொடுப்பனவு செய்துவிட்டு அந்தத் தொகையை மீளளிப்புச் செய்வதற்காக தேர்தல்கள் செயலகத்துக்கு அனுப்பப்படுகின்ற கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

03.(ii).(2) அறிவுறுத்தல் வகுப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் அலுவலர்களுக்கு தமது உத்தியோகபூர்வ வாகனம்/ஒதுக்கப்பட்ட வாகனங்கள் மூலம் தமது நிரந்தர சேவை நிலையத்திலிருந்து அறிவுறுத்தல் வகுப்பு நடாத்தப்படும் இடம் வரை வருவதற்கு மற்றும் மீண்டும் தனது சேவை நிலையத்திற்கு திரும்பி வருவதற்கு குறிப்பிட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு, பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அனுமதி வழங்க முடியும். **மேலும் உத்தியோகபூர்வ வாகனங்கள்/ஒதுக்கப்பட்ட வாகனங்களை பயன்படுத்திக்கொள்ளும் அலுவலர்கள் அறிவுறுத்தல் வகுப்புக்களில் பங்குபற்றுவதற்காகச் செல்வதற்கு எரிபொருள் தேவைப்படுமாயின் அதற்கு அறிவுறுத்தல் வகுப்பிற்கு அழைப்பு விடுத்த பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளருடாக எழுத்து மூலமாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திடம் வினவுதல் வேண்டும்.** மேலதிக அறிவுறுத்தல்களுக்கு இலக்கம் **PRE/2024/48** மற்றும் **2024.08.26** ஆம் திகதிய சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

03.(iii) தமது சேவை நிலையம் அமைந்துள்ள மவட்டத்தின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக அல்லது வெளி மாவட்டம் ஒன்றுக்கு தேர்தல் அலுவல்களுக்காக அப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு கடமைக்கு சமூகமளிப்பதற்காகச் செல்வதற்கு தனது தனிப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்காக **V-4** படிவத்தினூடாக குறிப்பிட்ட தெரிவத்தாட்சி அலுவலரின் அல்லது பிரதி/ உதவித் தேரதல்கள் ஆணையாளரின் முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு சமூகமளிக்கும் அலுவலர்களுக்கு தமது நிரந்தர சேவை நிலையம் அல்லது தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்ட வரையறையின் கீழ் அல்லது வீட்டிலிருந்து அல்லது குறிப்பிட்ட தெரிவத்தாட்சி அலுவலரது அலுவலகத்திற்கு ஒருமுறை வருவதற்கு மற்றும் திரும்பிச் செல்வதற்கான மைல் கூலியைச் செலுத்த முடியும். கொழும்பிலிருந்து தூரப் பிரதேசங்களில் கடமை ஒப்படைக்கப்பட்டுள்ள அவ்வாறான அலுவலர்களின் கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு அதிக செலவு ஏற்படாதிருப்பின் மாத்திரமே அனுமதித்தல் வேண்டும். மேலதிக அறிவுறுத்தல்களுக்கு இல. **PRE/2024/47** மற்றும் **2024.08.26** ஆம் திகதிய சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

**03.(iv) தனிப்பட்ட வாகனங்களுக்கு தனிப்பட்ட சாரதிகளை ஈடுபடுத்திக்கொள்ளல்.**

உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக தெரிவுசெய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அம்மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர், பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் முன்னனுமதியின் கீழ் தனது தனிப்பட்ட வாகனத்தைக் கொண்டுவரும்போது தேவையேற்படின் தனிப்பட்ட சாரதியொருவரை ஈடுபடுத்திக் கொள்ள முடியும். சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் கொண்டுவரும் வாகனத்திற்கு ஈடுபடுத்தப்படும் சாரதிக்குச் செலுத்தப்படும் கொடுப்பனவு இந்தச் சாரதிகளுக்கும் செலுத்தப்படும். (இது சம்பந்தமாக வெளியிடப்படும் தேர்தல் கடமைகளுக்கான செலுத்துகைகள் எனும் சுற்றறிக்கையைப் பார்க்கவும்.) அவ்வாறு வரும் சாரதிகள் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் (போக்குவரத்து) காணப்படும் **V-5** படிவத்தை 02 பிரதிகளில் பூர்த்தி செய்து ஒப்படைத்தல் வேண்டும். கடமை நிறைவுபெற்றதன் பின்னர் அந்தப் படிவத்தின் "ஆ" பகுதியை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) ஊடாக பூர்த்திசெய்து அதில் இரண்டு பிரதிகளை மீளப் பெற்று ஒரு திகதியை சாரதி வருகை சான்றிதழாகவும் அடுத்த பிரதியை தமது செலுத்துகை வவுச்சரின் வருகை சான்றிதழாகவும் இணைத்தல் வேண்டும். மேலதிக அறிவுறுத்தல்களுக்காக இல. **PE/2024/47** மற்றும் **2024.08.26** ஆம் திகதிய சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

03.**(v)** தனிப்பட்ட வாகனங்களை கொண்டுவரும் அலுவலர்கள் தாம் வந்தவுடனேயே வாகனத்தின் அனுமதிப் பத்திரத்தின் போட்டோப் பிரதியொன்றையும் **V-4** படிவத்தின் இரண்டு பிரதிகளையும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் (போக்குவரத்து) கையளித்தல் வேண்டும்.**கடமை நிறைவடைந்ததன் பின்னர் V-4 படிவத்தின் "ஆ" பகுதியை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) மூலமாக பூரணப்படுத்தி ஒரு பிரதியை**

பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் அதனை தமது பயணச் செலவுகள் வவுச்சருடன் இணைத்தல் வேண்டும். அந்தப் படிவம் இன்றி செலுத்துகை மேற்கொள்ளப்படமாட்டாது. இப்படிவத்தில் கையொப்பமிடும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) தனது பூரண கையொப்பத்தை இடவேண்டுமென்பதுடன் தமது பெயர் மற்றும் நிரந்தரப் பதவிப் பெயர் குறிப்பிடப்படும் அலுவலக முத்திரையைப் பதித்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களின் உண்மைத் தன்மைகளைப் பரீட்சிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதனால் அவற்றில் கையொப்பமிடுவதற்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அலுவலர்களின் பெயர்கள் மற்றும் மாதிரிக் கையொப்பம் அடங்கிய ஆவணமொன்றைப் பின்னர் எனக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். மேலதிக அறிவுறுத்தல்களுக்கு இல. **PE/2024/47** மற்றும் **2024.08.26** ஆம் திகதிய சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

**04. சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் தனிப்பட்ட வாகனங்களை தேர்தல் கடமைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ளல்**

04.(i) தமது சேவை நிலையம் அமைந்துள்ள மாவட்டத்தின் வாக்கெடுப்பு நிலையக் கடமைகளுக்காக சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் தமது வாக்கெடுப்பு நிலையத்திற்குரிய வாக்குப்பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுக்களைக் கொண்டு செல்வதற்கும் மீண்டும் எடுத்து வருவதற்கும் வாகனமொன்றைப் பயன்படுத்திக் கொள்வதாயின் அதற்கு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு கொண்டுவரும் வாகனங்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் கீழ் பெற்றோல் வாகனங்களுக்கு ஒரு கிலோமீற்றருக்கு **ரூ.52/-** மற்றும் டீசல் வாகனங்களுக்கு ஒரு கிலோ மீற்றருக்கு **ரூ.47/-** வீதமும் கொடுப்பனவினை மேற்கொள்ள முடியும். **இக்கொடுப்பனவுகள் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களால் கொண்டுவரப்படும் தனிப்பட்ட வாகனங்களுக்கு மாத்திரமே ஏற்புடையதாக இருக்கும். சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் கொண்டுவரும் வாகனங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் வாகனங்களுக்காக செலுத்தப்படும் விலை அளவுகளின் கீழான கட்டணத்தை ஒருபோதும் செலுத்தக்கூடாது. கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் கீழ் இந்த வாகனங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.**

**நிபந்தனைகள்**

- அவ்வாகனம் கலகங்கள் மற்றும் மக்கள் கொந்தளிப்பு போன்றவற்றிற்கான பூரண காப்புறுதி செய்யப்பட்ட வாகனமாக இருத்தல் மற்றும் வாகனம் மிகவும் சிறந்த ஓட்டத் தரத்தில் இருத்தல்.
- சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் வாகனத்தினைச் செலுத்தக் கூடாதென்பதுடன், அதற்காக தனிப்பட்ட ரீதியில் சாரதியொருவரை ஈடுபடுத்துதல் வேண்டும். சாரதிக்கு ஒரு நாளுக்காக செலுத்தப்படும் இணைந்த படி மற்றும் அதற்குரிய கால எல்லை சம்பந்தமான அறிவுறுத்தல்களை தேர்தலுக்கான செலுத்துகைகள் சம்பந்தமாக என்னால் வெளியிடப்படும் சுற்றறிக்கையில் மேலதிக விபரம் குறிப்பிடப்படும்.
- அந்த வாகனம் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர், அலுவலக உதவியாளர், ஒரு பொலீஸ். உத்தியோகத்தர் சாரதி உட்பட நான்கு பேருக்கு இலகுவாகப் பயணிக்க இருக்கவேண்டியதுடன் அவர்களின் பயணப் பொதிகள், வாக்குப்பெட்டிகள் உட்பட்ட ஏனைய பாதுகாப்பான பொருட்களையும் கொண்டுசெல்வதற்கான வசதிகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- இதற்காக மாருதி, மார்ச், ஸ்டார்லட் போன்ற சிறிய கார்களை **(Beetle Cars)** பயன்படுத்தல் கூடாது.
- வாகனம் சிறந்த ஓட்ட நிலையில் இருத்தல் வேண்டும்.
- இவ்வாறு வாகனங்களைக் கொண்டுவரும் அனைத்து சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரும் அதற்கான **V-3** தகவல் படிவத்தை இரண்டு பிரதிகளில் பூரணப்படுத்தி உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் (போக்குவரத்து) கையளித்தல் வேண்டும்.
- திரும்பி வரும்போது மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு பிரதிகளில் **"B"** பகுதியை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) ஊடாக நிரப்பி இரண்டு பிரதிகளை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு கையளித்தல் வேண்டும். அதன் ஒரு பிரதியை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் வாகனத்திற்குரிய வவுச்சருடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், மற்றைய பிரதியை சாரதியின் கொடுப்பனவு வவுச்சருடன் இணைத்தல் வேண்டும்.
- மேற்குறித்தவாறு கிலோமீற்றர் கட்டணம் செலுத்த வேண்டியது குறித்த வாகனம் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வாக்குப்பெட்டிகளை எடுத்துச் செல்வதற்கும் வாக்கெடுப்பின் பின்னர் அந்த வாக்குப் பெட்டிகளை வாக்கெண்ணல் நிலையங்களுக்குக் கையளிப்பதற்காக மீண்டும் எடுத்துவருவதற்கும் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டிருப்பின் மாத்திரமாகும்.

04.(ii) மேலே 04.(i) பந்திக்கு அமைய வாகனத்தைக் கொண்டுவரும் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரின் வீடு தனது சேவை நிலையம் அமைந்துள்ள மாவட்டத்திற்குள் அமைந்திருந்தால் அவர் வெளியேறிச்சென்ற இடத்தை அவர் வசிக்கும் வீடாகக் கருதி அவருக்குக் குறிப்பிட்ட வாக்கெடுப்பு நிலையம் வரை செல்வதற்கு மற்றும் திரும்பி

தனது வீடுவரை பயணிப்பதற்கும் கிலோமீற்றர் கட்டணத்தை செலுத்தவதற்கு இடமளிக்க முடியும். **இவ்வாறு வாகனங்களைக் கெண்டுவரும் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவர்களுக்கான செலுத்துகைகளை தேர்தல் அலுவலகங்களூடாக மாத்திரம் மேற்கொள்ள வேண்டுமென்பதுடன்,** பிற அலுவலகங்களூடாக செலுத்தப்பட்டு மீளளிப்புச் செய்வதற்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும். செலுத்துகைகள் சம்பந்தமான முறையென அறிவுறுத்தல்கள் உள்ளடங்கிய சுற்றறிக்கைகள் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் வெளியிடப்படும். மேலதிக அறிவுறுத்தல்களுக்கு இல. **PRE/2024/46** மற்றும் **2024.08.26** ஆம் திகதிய சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

## 05. வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல்

05. **(i)** அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கு சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருப்பதனால் மாவட்டத்திற்குள் பெற்றுக்கொள்ள முடியுமான வாகனங்களின் எண்ணிக்கை தேர்தல் கடமைகளில் பயன்படுத்துவதற்கு போதியளவில் இருக்காது. எனவே இந்தத் தேர்தலின்போது மாவட்டத்திலிருந்து உங்களது தேவையின் பிரகாரம் தனிப்பட்ட வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியும். வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் வான் வண்டிகளை ஒரு வாக்கெடுப்பு நிலையத்திற்கான கடமைகளுக்கு மாத்திரம் வரையறை செய்யலாகாதென்பதுடன் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதனை இரண்டு வாக்கெடுப்பு நிலையங்கள் உள்ளடக்கப்படும் வகையில் பயன்படுத்துதல் வேண்டும்.

05.**(ii)** இவ்வாறு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் வாகனங்கள் சிறந்த ஓட்ட நிலைமையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் பூரண காப்புறுதி செய்யப்பட்டவைகளாக இருக்கவேண்டியிருப்பினும் தேவையின் அடிப்படையில் மூன்றாம் தரப்பு காப்புறுதி செய்யப்பட்ட வாகனங்களையும் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆனாலும் அவ்வாறான வாகனங்கள் விபத்துக்குள்ளாகும்போது ஏற்படும் நட்டத்தை தேர்தல் ஆணைக்குழு எந்தவிதத்திலும் ஏற்காதென அவர்களுக்கு நேரகாலத்துடன் எழுத்து மூலமாக அறிவுறுத்த வேண்டுமென்பதுடன் அவர்களது எழுத்து மூலாமான இணக்கப்பாட்டையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

05.**(iii)** வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் வாகனங்களுக்குச் செலுத்த முடியுமான கட்டணங்கள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. ஏதேனும் விஷேட சந்தர்ப்பத்தின்போது வாடகை அடிப்படையில் கப் வண்டிகள் மற்றும் கார் வண்டிகளைப் பெற்றுக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டால் அதற்காக தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு இல. **PRE/2024/40** மற்றும் **2024.08.18** ஆம் திகதிய சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

| 1 கி.மீற்றருக்கான அனுமதிக்கப்பட்டுள்ள கட்டணம் | | |
|---|---|---|
| **வாகன வகை** | **பெற்றோல் வாகனம்** | **டீசல் வாகனம்** |
| 08 ஆசனங்களிலும் குறைந்த வான்/ ஜீப் | ரூ.125.00 | ரூ.120.00 |
| 08-14 ஆசனங்களைக் கொண்ட வான் | ரூ.130.00 | ரூ.140.00 |
| 15-25 ஆசனங்களைக் கொண்டவை | | ரூ.150.00 |
| 26-39 ஆசனங்களைக் கொண்டவை | - | ரூ.160.00 |

மேலே குறிப்பிடப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமூகமளித்த நேரம் முதல் வாகனம் விடுவிக்கப்பட்ட நேரம் வரையிலான காலப் பகுதிக்காக நிறுத்தி வைத்தல் கட்டணமாக ஒரு மணித்தியாலயத்திற்கு ரூபா 100.00 தொகையைச் செலுத்த முடியும்.

வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளிக்கப்பட்டதன் பின்னரான மொத்தக் காலப்பகுதியினுள் குறைந்தது 50 கிலோமீற்றர் துாரமாவது ஓடப்படாத சந்தர்ப்பத்தின் போது அவ்வாறான வாகனங்களுக்கு 50 கிலோமீற்றர் துாரத்திற்கான குறைந்த கட்டணத்தை செலுத்தமுடியுமாக இருப்பதுடன் 50 – 100 வரை ஓடிய சந்தர்பங்களில் அந்த வாகனங்களுக்கு 100 கிலோ மீற்றர் துாரத்திற்கும், 100 கிலோமீற்றரிலும் அதிகமான துாரத்தை ஓடியுள்ள சந்தர்ப்பங்களின்போது ஓடிய துாரத்திற்கு அமையவும் கட்டணம் செலுத்த வேண்டும். இந்த வாகனங்களுக்காக ஒரு கிலோ மீற்றருக்கு செலுத்தப்படும் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக இரண்டு நாட்களுக்கு சாரதிக்கான கொடுப்பனவாக ஒரு நாளைக்கு ரூ.750.00 வீதம் (வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினம் மற்றும் வாக்கெடுப்பு தினம்) ரூ.1500.00 விஷேட படியொன்றை செலுத்த முடியும். இந்தப் படியை 26 ஆசனங்களிலும் அதிக ஆசனங்களைக் கொண்ட வாகனங்களின் சாரதியின் உதவியாளர்களுக்கும் செலுத்த முடியும்.

05.**(iv)** மாவட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் இந்த வாகனங்கள் நிறுத்திவைக்கப்படும் இடத்திலிருந்து கொண்டுசெல்லப்படும் இடம் வரை கொண்டு செல்வதற்கு மற்றும் திரும்பி வருவதற்கு (மாவட்டத்திற்குள்) ஓடும் துாரத்திற்கும் **05(iii)** பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்த முடியும். ஆயினும் வாகனமொன்றை

ஏனுமொரு கடமையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கும் சந்தர்ப்பத்தில் தொழில்நுட்பக்கோளாறு அல்லது வேறு காரணமொன்றினால் ஓடுவதற்கு முடியாவிடில் அவ்வாறான வாகனங்களுக்கு எந்தவிதக் கட்டணத்தையும் செலுத்தக் கூடாது. இல. **PRE/2024/40** மற்றும் **2024.08.18** ஆம் திகதிய சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

05.**(v)** வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்கள் ஈடுபடுத்த முடிவது வாக்குப்பெட்டிகள் மற்றும் வாக்குச்சீட்டுக்களுடன் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களை வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைத்தல் மற்றும் மீள வரவழைத்துக் கொள்வதற்காகவும் மற்றும் தேவையான மாவட்டங்களில் வாக்களிப்பு நிலையப் பணியாட் குழுவினரை தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்புதல் மற்றும் மீள வரவழைத்துக் கொள்வதற்கும் தேவைப்பாட்டின் அடிப்படையில் வலயப் பெறுப்பு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஒதுக்கிக் கொடுப்பதற்காகவும் மாத்திரமாகும். **நலனோம்பல் நடவடிக்கைகள் அல்லது வேறு குழுக் கடமைகளுக்காக தனியார் வாகனங்களை பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்கள் தவிர்ந்த ஏனைய எந்தவொரு வாகனத்திற்காகவும் வாடகை அடிப்படையில் கட்டணங்களைக் கொடுப்பனவு செய்தல் கூடாது.**

05.**(vi)** வாகனங்கள் குழாமொன்றைப் பேணி வருவதற்காக வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடாது. வாக்கெடுப்புக்கு முந்திய தினம் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள், வாக்களிப்பு நிலையப் பணியாட் குழுவினர் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதன் பின்னர் மீதமாய் உள்ள அனைத்து வாடகை வாகனங்களையும் (வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்காக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வாகனங்கள் தவிர்ந்த) விடுவித்துத் திருப்பி அனுப்புதல் வேண்டும். **வாக்கெடுப்பு நிலையப் பணியாட் குழுவினரின் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட வாடகை வாகனங்கள் வாக்கெடுப்புப் பணிகள் முடிவடைந்த பின்னர் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களுக்கு மீள வருகைதந்த பின்னர் வேறு பணிகளில் ஈடுபடுத்தாது கூடிய விரைவில் விடுவித்து அனுப்பி வைத்தல் வேண்டும்.**

**06. இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளைப் பயன்படுத்திக் கொள்ளல்**

06.**(i)** இந்தத் தேர்தலின்போதும் பணியாட் குழாம், வாக்குப்பெட்டிகள் மற்றும் ஏனைய பொருட்களைக் கொண்டுசெல்வதற்கு இலங்கைப் போக்குவரத்து சபையின் பொதுக்கட்டண முறையொன்றின் கீழ் பஸ் வண்டிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அது சம்பந்தமாக தேவையான அறிவுறுத்தல்கள் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. தங்களது மாவட்டத்திற்குத் தேவையான பஸ் வண்டிகளின் எண்ணிக்கையை இலங்கைப் போக்குவரத்து சபையின் அருகிலுள்ள டிப்போ ஊடாக பெற்றுத்தருவதற்கு இலங்கைப் போக்குவரத்து சபை நடவடிக்கை மேற்கொள்ளும். அதற்காக அருகிலுள்ள டிப்போவின் டிப்போ அத்தியட்சகர், முகாமையாளருடன் (ஓட்டம்) கலந்துரையாடி தேவையான பஸ் வண்டிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தயவுசெய்து நடவடிக்கை மேற்கொள்ளவும். மேலதிக அறிவுறுத்தல்களுக்கு இல. **PRE/2024/41** மற்றும் **2024.08.18** ஆம் திகதிய சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

இலங்கைப் போக்குவரத்து சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் பஸ் வண்டிகளுக்கான செலுத்துகைகளை மேற்கொள்ளும் போது கீழ் குறிப்பிடப்படும் கட்டணங்களின் அடிப்படையில் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

| விபரம் | **40 ஆசனங்களுக்கு மேற்பட்ட சாதாரண பஸ் வண்டிகளுக்கான கட்டணம்** | **40 ஆசனங்களுக்கு குறைவான சாதாரண பஸ் வண்டிகளுக்கான கட்டணம்** |
|---|---|---|
| ஒரு நாளைக்கு ஆகக் குறைந்த அறவீடு<br>ஆகக் குறைந்த கட்டணத்தின் கீழ் பயணிக்கக் கூடிய உச்சளவு கி.மீ அளவு 100 கி.மீ<br>வழங்கக்கூடிய உயர்ந்தபட்ச காலம் 12 மணித்தியாலங்கள் | ரூ.30,000.00 | ரூ.27,000.00 |
| 100 கி.மீற்றருக்கு மேற்படும் போது மேலதிக 1 கி.மீற்றருக்கான கட்டணம் | ரூ.165.00 | ரூ.165.00 |
| வழங்கப்பட்ட காலத்தை விஞ்சிய மேலதிக ஓட்ட மணித்தியாலம் ஒன்றுக்கான அறவீடு.<br>(மேலதிக காலம் கணிப்பிடல் 10 கி.மீ இற்காக 01 மணித்தியாலம்) | ரூ.500.00 | ரூ.500.00 |
| ஒரு நாளுக்கான இரவு தங்குமிட கட்டணம் | ரூ.1500 | ரூ.1500 |

6.**(ii)** மேற்படி **06.(i)** ஆம் இலக்க பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக சாரதிகளுக்குரிய கொடுப்பனவாக ஒரு நாளைக்கு ரூபா 900.00 கொடுப்பனவு செய்ய முடியும். வாகன உதவியாளரொருவர் (நடத்துநரொருவர்) இருப்பின் அவருக்காகவும் ஒரு நாளைக்கு ரூபா 900.00 தொகையைச் செலுத்த முடியும். இந்த பஸ் வண்டிகளை வாக்கெடுப்பு தினத்திற்கு முந்திய தினம் (அதாவது 2024.09.20 ஆம் திகதி) காலையில் விநியோகித்தல் நிலையங்களுக்கு வரவழைப்பது போதுமானதாகுமென்பதோடு, அதற்கமைய இரண்டு தினங்களுக்கு இந்தக் கொடுப்பனவை வழங்க முடியும். வாக்கெண்ணல் பணிகள் நிறைவடைந்த பின்னர் அந்த பணியாட் குழுவினரை புகையிரத நிலையம் அல்லது பஸ் தரிப்பு நிலையம் ஆகியவற்றுக்கு அனுப்பி வைப்பதற்கு பொது வாகனங்கள் இல்லாத சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் மாவட்டத்திற்குள் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக இலங்கைப் போக்குவரத்து சபையின் சில பஸ் வண்டிகளை வரவழைத்து வைத்துக் கொள்வது உசிதமாகும். இருப்பினும் அந்த பஸ் வண்டிகளை எந்த காரணத்திற்காகவும் மாவட்டத்திற்கு வெளியில் ஓட்டத்தில் ஈடுபடுத்தக் கூடாது.

**07.** <u>**தனியார் பஸ் கம்பனிகளின் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்படும் பஸ் வண்டிகள்.**</u>

07.**(i)** இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ் வண்டிகளுக்கு மேலதிகமாக இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்திடமிருந்தும் தங்களது மாவட்டத்திற்குத் தேவையான பஸ் வண்டிகளைப் பெற்றுக்கொள்வதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வெளியிடப்பட்ட இல. **PRE/2024/42** மற்றும் **2024.08.18** ஆம் திகதிய சுற்றறிக்கை ஊடாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும். அந்த பஸ் வண்டிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இணக்கம் காணப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட கட்டணங்கள் கீழே குறிப்பிடப்படுவதுடன் அந்தக் கட்டணங்களின் கீழ் தேர்தல் நிறைவுபெற்றதன் பின்னர் செலுத்துவதற்கு தயவுசெய்து நடவடிக்கை மேற்கொள்ளவும்.

<u>மாவட்டத்திற்குள் ஓடுவதற்கு ஒரு நாளைக்குரிய கொடுப்பனவு.</u>

| | **42 ஆசனங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட (ரூபா)** | **30 தொடக்கம் 40 வரையான ஆசனங்கள் (ரூபா)** | **25 தொடக்கம் 29 வரையான ஆசனங்கள் (ரூபா)** |
|---|---|---|---|
| 50 கி.மீ. வரை | 18,850.00 | 16,850.00 | 15,850.00 |
| 51 தொடக்கம் 75 கி.மீ. வரை | 20,850.00 | 18,850.00 | 17,850.00 |
| 76 தொடக்கம் 100 கி.மீ. வரை | 23,850.00 | 21,850.00 | 20,850.00 |
| 101 தொடக்கம் 125 கி.மீ. வரை | 26,850.00 | 24,850.00 | 23,850.00 |
| 125 கி.மீற்றருக்கு மேற்படும்போது 1 கி.மீற்றருக்கு | 250.00 | 200.00 | 200.00 |

இந்த பஸ் வண்டிகளை தேர்தல் தினத்திற்கு முந்திய தினம் அதாவது **2024.09.20** ஆம் திகதி காலை விநியோகித்தல் நிலையங்களுக்கு அழைத்தல் போதுமானதென்பதோடு, கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது இரண்டு தினங்களுக்கு கொடுப்பனவு செய்ய முடியும்.

1. மேலுள்ள கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக சாரதிக்கு தினமொன்றிற்கு ரூ.900.00, வாகன உதவியாளரொருவர் இருப்பின் அவருக்கும் தினமொன்றிற்கு ரூ.900.00 செலுத்த முடியும்.
2. எரிபொருளை வழங்குதல் அல்லது நிறுத்தி வைத்தல் கட்டணம் எதனையும் செலுத்தக் கூடாது.
3. குறிப்பிட்ட மாவட்டத்திற்குள் நிறுத்தி வைக்கப்படும் பஸ் வண்டிகளிலிருந்து மாத்திரமே தேவையான பஸ் வண்டிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
4. இந்த பஸ் வண்டிகளைப் பெற்றுக்கொள்ளும் போது தேர்தல் தினத்திற்கு முந்திய தினம் (2024.09.20 ஆம் திகதி) காலை விநியோகித்தல் நிலையங்களுக்கு அழைக்கப்பட்டு தேர்தல் நிறைவுபெற்று வாக்கெண்ணல் நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளைக் கையளித்தலுடன் விடுவித்தல் வேண்டும். (அப்போது இரண்டு தினங்களுக்கான வாடகை மற்றும் இரண்டு தினங்களுக்கான சாரதி/வாகன உதவியாளர் பிழைப்புக் கொடுப்பனவுகளை மாத்திரமே செலுத்த வேண்டியேற்படும்.)

07.**(ii)** தேர்தல் தினத்திற்கு முந்திய தினம் இரவில் குறிப்பிட்ட வாக்கெடுப்பு நிலையங்களில் பஸ் வண்டிகளை நிறுத்தி வைத்தல் வேண்டும். பஸ் வண்டிக்கு உதவியாளரொருவரின் உதவியைப் பெற்றுக்கொள்ளப்படாத வாக்கெடுப்பு நிலையங்களில் அந்த வண்டியை முன்புறமாக, பின்புறமாக திருப்புவதற்கான தேவையேற்படும்போது வாக்கெடுப்பு நிலையத்தின் அலுவலக உதவியாளர் அல்லது பாதுகாப்பு அலுவலரின் உதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தவும். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு இல. **PRE/2024/42** மற்றும் **2024.08.18** ஆம் திகதிய சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

## 08. தோட்டக் கம்பனிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் வாகனங்கள்

பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு முகாமைத்துவம் கையளிக்கப்பட்டுள்ள தோட்டக் கம்பனிகளுக்குரிய வாகனங்கள் பராமரிப்பு நடவடிக்கைகளை அக்கம்பனிகளே மேற்கொள்கின்றன. எனவே அந்தத் தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான வாகனங்களை அரசாங்க நிறுவனங்களின் வாகனங்களாகக் கருதி தேர்தல் கடமைகளுக்கு வழங்க முடியாதென அந்தத் தோட்டக் கம்பனிகளின் முகாமைத்துவத்தினால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட வாகனங்கள் தனியார் துறையினால் பராமரிக்கப்படுவதன் காரணமாக அந்த வாகனங்களையும் தனியார் துறையிலிருந்து வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களாகக் கருதி இந்த சுற்றறிக்கையின் 05.(**iii**) உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கொடுப்பனவுகளை செலுத்துதல் வேண்டும். ஓடும் மைல்களின் எண்ணிக்கைக்கமைய கட்டணங்களைச் செலுத்தவேண்டியேற்படுவதனால் தோட்டக் கம்பனிகளுக்குரிய வாகனங்களை தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள் அல்லது அவர்களது பணிக்குழாமை வாக்கெடுப்பு நிலையத்திற்கு அனுப்புதல் மற்றும் திரும்பி வரும் அலுவலுக்கு மாத்திரம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அந்த வாகனங்களுக்குரிய கொடுப்பனவுகளை மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில் மேற்கொள்ள வேண்டுமென்பதுடன் அவர்களுக்கான கொடுப்பனவுகள் சம்பந்தமான கோரிக்கைகளை தேர்தல்கள் செயலகத்திற்கு சமர்பிக்கக் கூடாதென அறிவுறுத்தல் வழங்கவும்.

## 09. கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் வங்கிகளுக்குச் சொந்தமான வாகனங்கள்

கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் வங்கிகள் ஆகியவற்றிற்குச் சொந்தமான வாகனங்களுக்கு வாடகை அல்லது மைல் கூலி செலுத்தப்படாவிடினும் அவற்றின் சாரதிகளுக்குச் செலுத்தப்படும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளின் அளவு அரச திணைக்களங்களின் சாரதிகளுக்குச் செலுத்தும் அளவைப் பார்க்கிலும் மிக அதிகமாகும். எனவே செலவைக் குறைத்துக் கொள்வதற்காக அந்த **வாகனங்களைத் தேர்தல் நடைபெறும் தினத்திற்கு, ஒரு நாளைக்கு முன்னர் சேவைக்காக அழைப்பதற்கும் தேர்தல் நிறைவுபெற்ற அடுத்த தினம் முற்பகலிலேயே சேவையிலிருந்து விடுவிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்த வாகனங்களை தேர்தல் நிறைவுபெற்றதன் பின்னர் எந்தவொரு தேவைக்கும் பயன்படுத்துவதற்காக வைத்திருக்கக்கூடாது. மேலும் பூர்வாங்க ஏற்பாட்டு நடவடிக்கைகளுக்காக இவ்வாறான வாகனங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடாது.**

## 10. வாடகை அடிப்படையில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படும் வாகனங்களின் ஓட்டக் குறிப்பைப் பேணிவரல்

வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்களைப் பேணி வரல் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் தனியார் வாகனங்கள் மற்றும் தோட்டக் கம்பனிகளுக்குரிய வாகனங்கள் தொடர்பாக அந்த ஒவ்வொரு வாகனங்களுக்கும் ஓட்டக் குறிப்புக்களைத் தயாரித்தல் வேண்டும். அது அரசாங்க வாகனங்களின் ஓட்டம் தொடர்பான விபரங்களைக் குறித்துக்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் பொது **268** படிவத்தை நேரொத்ததாக இருத்தல் வேண்டும். பயணிக்கும் சிரேட்ட அலுவலர் பெயர் மற்றும் நிரந்தரப் பதவியைக் குறிப்பிடுவதற்கும் அவரது முழுமையான கையொப்பத்தை இடுவதற்கும் அந்தப் படிவத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

## 11. அஞ்சல் திணைக்களத்திற்குத் தேவையான வாகனங்கள்

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கு அஞ்சல் திணைக்களத்திடம் போதுமானளவில் வாகனங்கள் இல்லாதிருக்க முடியுமாகையினால் அந்த அலுவலுக்கு வாகனங்களைக் கோரினால் அரசாங்க வாகனங்கள் சிலதை வழங்க வேண்டும். ஆயினும் அந்த வாகனங்களுக்குத் தேவையன எரிபொருள் செலவை அஞ்சல் திணைக்களம் ஏற்க வேண்டும். அந்த சாரதிகளின் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் இணைந்த படிகள் ஆகியவற்றை மாவட்டத் தேர்தல் அலுவலகத்தினால் செலுத்த வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு இல. **PRE/2024/39** மற்றும் **2024.08.18** ஆம் திகதிய சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

## 12. இலங்கைப் பொலீஸிற்குத் தேவையான வாகனங்கள்

12.(**i**) இந்தத் தேர்தலின்போது பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு **இலங்கைப் பொலிஸிற்கு** கணிசமானளவு வாகனங்கள் தேவைப்படும். **தெரிவத்தாட்சி அலுவலரின் தேவைக்குப் போதுமானளவு வாகனங்கள் இருந்தால் மாத்திரம் இலங்கைப் பொலிஸின்** தேவைக்கு அரசாங்க வாகனங்களைப் பெற்றுக்கொடுத்தல் பொருத்தமாகும். **இவ்வாறு வழங்கப்படும் வாகனங்களுக்குத் தேவையான எரிபொருள் செலவை இலங்கைப் பொலிஸிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளினால் மேற்கொள்ள வேண்டும்.** சாரதிகளின் மேலதிக நேர வேலை மற்றும் இணைந்த படிகள் போன்ற கொடுப்பனவுகளை குறிப்பிட்ட மாவட்டத் தேர்தல் அலுவலகத்தினால் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு அரசாங்க வாகனங்களை வழங்குவதற்கு முடியாத சந்தர்ப்பத்தில், **இலங்கைப் பொலீஸின்** அலுவலர்களுக்கு அதுபற்றி அறிவிக்க வேண்டுமென்பதுடன்**, இலங்கைப் பொலிஸின் தேவைக்காக பொலீஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய அவர்களுக்கு வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் வாகனங்களுக்கான வாடகையை**

**இலங்கைப் பொலீஸ் மேற்கொள்ளும்.** தேர்தலின்போது **இலங்கைப் பொலீஸின்** தேவைக்காகப் பெற்றுக் கொள்ளப்படும் தனியார் வாகனங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முன்னர் குறிப்பிட்ட தேர்தல் அலுவலகங்களில் பதிவுசெய்ய வேண்டுமென்பதுடன் தேவைக்கமைய பொருத்தமான வாகனங்களைத் தெரிவுசெய்யும் அலுவலை **இலங்கைப் பொலீஸ்** மேற்கொள்ள முடியும்.

12.**(ii)** கடந்த தேர்தல்களின்போது சில மாவட்டங்களில் பொலிஸ் அலுவலர்களுக்குத் தேவையான வாகனங்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களிலிருந்து வழங்கப்பட்டதன் காரணமாக கொடுப்பனவு மேற்கொள்ளும்போது பிரச்சினைகள் எழுந்ததாக எனக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. இத்தேர்தலின்போது அவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதவாறு முன் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இல. **PRE/2024/39** ஆம் இலக்க, **2024.08.18** ஆந் திகதிய சுற்றறிக்கை மூலம் இது சம்பந்தமாக தேவையான மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 13. இலங்கை இராணுவத்திற்குத் தேவைப்படும் வாகனங்கள்

தேர்தலின்போது இராணுவம் யாதேனும் ஒரு பணிக்கு அழைக்கப்படுமாயின், அதற்கு **இலங்கை பொலிஸாரினால்** அவர்களுக்கு ஒத்தாசை வழங்கப்பட வேண்டும். ஆகையால், இராணுவத் தேவைகளுக்கு வாகனங்களை **இலங்கை பொலீஸாருக்கு** வழங்க வேண்டும் என்பதுடன், கொடுப்பனவுகள் பற்றிய பொறுப்பு **இலங்கை பொலீஸாருக்கு** உரித்தாக்கப்படும்.

**14.** அரச வாகனங்களைத் தேர்தல் கடமைகளுக்கு ஏற்புடையதல்லாத தனிப்பட்ட பயணங்களுக்காகப் பயன்படுத்தல், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் கொண்டுவரும் வாகனங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களுக்குச் செலுத்தப்படும் கட்டணங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், பிழையான விதத்தில் அலுவலர்களுக்கு மைல் கட்டணங்கள் கொடுப்பனவு செய்தல், எனது அனுமதிக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தல், சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக கொடுப்பனவு செய்தல் முதலியன சம்பந்தமாக கடந்த தேர்தல்களின்போது முறைப்பாடுகளும் கணக்காய்வு ஐயவினாக்களும் எனக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவை எனது கவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். இத்தேர்தலின்போது அவ்வாறான நிலைமைகள் பற்றி அறிக்கையிடப்படாத விதத்தில் செயலாற்றும் தேவையை தங்கள் அலுவலர்களுக்கு தயவுடன் தெளிவுபடுத்தவும். தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படும் வாகனங்கள் தேர்தல் கடமைகள் முடிவடைந்தவுடன் விடுவிக்காமல், அவற்றை சில நாட்களுக்கு தாமதப்படுத்துவதன் காரணமாக தேர்தலின் பின்னர் தமது நிறுவனங்களுக்கு கடமை அலுவல்களுக்கு தடங்கள் ஏற்படுவதாக அரசாங்கத்தின் சில திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் எனக்கு முறைப்பாடு செய்துள்ளனர். அந்நிலைமைகளின் அடிப்படையில் அவர்கள் தேர்தல் கடமைகளுக்கு தமது அலுவலகங்களின் வாகனங்களை விடுவிப்பதற்கு ஆர்வம் காட்ட மாட்டார்கள்.

ஆகையால் வெளி மாவட்டங்களில் அரச நிறுவனங்களிலிருந்து கொண்டுவரப்படும் வாகனங்கள் போலவே மாவட்டத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களையும் தேர்தல் முடிவடைந்த தினத்திற்கு மறுநாள் முற்பகலில் சேவையிலிருந்து விடுவித்து அனுப்பிவைக்க ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். தேர்தல் கடமைகளுக்காக அரச நிறுவனங்களில் குழாம் வாகனங்களை எந்தவொரு அலுவலருக்கும் தேர்தல் கடமைகளுக்காக கொண்டுவருவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் அதற்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்படலாகாது. தமது மாவட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் அரச வாகனங்கள் **தவிர்ந்த கொழும்பு குழாமிலிருந்து அல்லது வேறு மாவட்டமொன்றிலிருந்து அனுப்பிவைக்கப்படும் அரச வாகனங்களை எந்தவொரு காரணத்தினாலும் இலங்கை பொலீஸின் தேவைகளுக்கு வழங்கப்படல் ஆகாது.**

## 15. எரிபொருள் கட்டளையை விநியோகித்தல்

15.**(i)** கடன் வசதிகளின் கீழ் பொது 231 எரிபொருள் கட்டளைகள் ஊடாக எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும்போது கீழ் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கயைம நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

**I.** அவசியமான எரிபொருள் கட்டளைப் புத்தகங்களை களஞ்சியசாலையிலிருந்து பெற்றுக்கொள்ளும்போது கட்டளைகளில் குறிப்பிடப்பட்ட இலக்க ஒழுங்குவரிசைப்படி புத்தகங்களை விநியோகித்தலும் பொறுப்பேற்றலும்.

**II.** சில புத்தகங்கள் ஒரே தடவையில் பயன்படுத்தாமையும் ஒரு புத்தகம் முடிவடைந்த பின்னர் மாத்திரம் அடுத்த புத்தகத்தைப் பாவனைக்கெடுத்தலும். (கட்டளைகளை கையொப்பமிடுவதற்கு அலுவலர்கள் சிலருக்கு அதிகாரமளித்துள்ளபோது அவர்களுக்கு வெவ்றோக புத்தகங்களை வழங்க முடியும்.)

III. எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு **V-2** படிவத்திற்கமைய தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவமொன்றை சாரதிகள்மூலம் பூரணப்படுத்திக்கொள்ளல்.

IV. மேற்கொள்வதற்குள்ள கடமைக்குப் போதிய எரிபொருள் அளவை மட்டும் கணக்கிட்டு வழங்குதல். (ஒருபோதும் அநாவசியமான முறையில் எரிபொருள் விநியோகிப்பதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும்.)

V. இயலுமான எல்லா வேளைகளிலும் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு முதல் ஓட்ட விபரக்குறிப்புக்களை சமப்படுத்தி சமர்ப்பிக்குமாறு சாரதிகளை அறிவுறுத்தவும்.

VI. எரிபொருள் விநியோகிப்பதற்கான ஆவணமொன்றைப் பேணி வர வேண்டும் என்பதுடன், தேவையான விபரங்கள் அதில் உட்படுத்தப்படுதல் வேண்டும். **மேலதிக விபரங்களை அறிந்துகொள்வதற்கு PRE/2024/16 ஆம் இலக்க, 2024.07.28 ஆந் திகதிய போக்குவரத்துச் சுற்றறிக்கையைப் பார்க்கவும்.**

VII. எதிர்கால கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக இத்தகவல்கள் அவசியப்படுமென்பதால், இந்த ஆவணத்தை தேர்தல் முடிவடைந்து இரண்டு வார காலத்துள் பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் பொறுப்பில் எடுத்தல் வேண்டும்.

15.**(ii)** எரிபொருள் கட்டளைகளில் கையொப்பமிடும் அலுவலை இரண்டு அல்லது மூன்று அலுவலருக்கு மாத்திரம் வரையறை செய்ய வேண்டும். அவ்வாறு எரிபொருள் கட்டளைகளில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர்கள், உத்தியோகபூர்வ பதவிப் பெயர், அலுவலக முகவரிகள் மற்றும் மாதிரிக் கையொப்பங்களை எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்களுக்கு முற்கூட்டியே பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

15.**(iii)** கடன் வசதிகளின் கீழ் எரிபொருள் வழங்குவதற்கு சாரதியுடன் மட்டும் அனுப்பலாகாது என்பதுடன், **எப்பொழுதும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவர் அல்லது வேறு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவருடன் அனுப்புதல் வேண்டும்.** குறித்த உத்தியோகத்தரின் முன்னிலையில் வாகனத்தின் தாங்கிக்கு எரிபொருள் நிரப்பியதாக கட்டளையின் இடப்புற மேல் மூலையில் குறிப்பொன்றை இடவேண்டும். இக்குறிப்பு பின்வரும் மாதிரிக்கமைய இறப்பர் முத்திரையொன்றின் மூலம் இட நடவடிக்கை எடுக்க முடியும்.

> **என் முன்னிலையில் ......................... ஆம் இலக்க வாகனத்தின் எரிபொருள் தாங்கிக்கு ......................... லீட்டர் பெற்றோல் / டீசல் எரிபொருள் நிரப்பப்பட்டது.**
>
> **மைலோ மீற்றரின் வாசிப்பு:**
>
> | ..................... | ............................ | ......................... |
> |---|---|---|
> | **திகதி** | **நேரம்** | **கையொப்பம்** |

15.**(iv)** தேர்தல் கடமைகளுக்கு அரசாங்க நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் வாகனங்களுக்கு, குழாம் வாகனங்களுக்கு (Pool Vehicles) எரிபொருள் வழங்கும்போது இந்த ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். வாகனங்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருளுக்கு செலவான தொகையை மீள்நிரப்பல் செய்வதற்கு **PV– 01** படிவத்தைப் பயன்படுத்த வேண்டும்.

**16. திடீர் விபத்துக்குள்ளாகும் அரசாங்க வாகனங்கள் சம்பந்தமாக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்**

16.**(i)** தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்திக்கொள்ளப்படும் வாகனமொன்று திடீர் விபத்துக்கு உள்ளானால் பொதுவான வீதி விபத்தொன்றின்போது பின்பற்றப்பட வேண்டியதன் பிரகாரம் பொலீஸிற்கு அறிவித்து தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

- விபத்து சம்பந்தமாக உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தல்.
- வாகனம் பூரணக் காப்புறுதி செய்யப்பட்டிருப்பின், உரிய காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவித்தல்.
- விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் வாகனத்தைச் செலுத்திய சாரதியின் வாக்குமூலத்தைப் பதிந்துகொள்ளல்.

- விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் வாகனத்தில் பயணித்த ஏனைய நபர்கள் இருப்பின், அவர்களது வாக்குமூலங்களைப் பதிந்துகொண்டு அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளல்.

- விபத்து இடம்பெற்ற இடத்தின் மாதிரி வரைபடமொன்றைப் பெற்றுக்கொள்ளல்.

- அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் நட்டம் சம்பந்தமாக பொறிமுறைப் பொறியியலாளர் ஒருவர்/ மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவர் ஊடாக பரீட்சித்து அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளல்.

16.**(ii)** வாகனம் பூரணக் காப்புறுதி செய்யப்பட்டிருப்பின், நட்டத்தை உரிய காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அதன்போது மொத்த நட்டத்தையும் மீள்நிரப்பல்செய்யப்படாத பட்சத்தில் அதனை ஈடுசெய்துகொள்வதற்காக அனைத்து விபரங்களும் அடங்கிய உங்களது பரிந்துரை அறிக்கையை எனக்கு அனுப்புதல் வேண்டும். விபத்துக்குள்ளான வாகனத்தை திருத்துவதற்கான நிதிஒதுக்கீடுகளை தேர்தல் ஆணைக்குழுவின் செலவுத்தலைப்புகளிலிருந்து சுமப்பதாயின், மேற்படி பந்தி 16.**(i)** இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுக்கு மேலதிகமாக பின்வரும் விபரங்களையும் வழங்குதல் வேண்டும்.

- விபத்து தொடர்பாக நிறுவனத்தலைவரினால் நியமனம் செய்யப்பட்ட விசாரணைக்குழுவின் இறுதி அறிக்கை
- வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் சம்பந்தமான முழு விபரம்
- மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகரின் அறிக்கையுடனான மொத்த மதிப்பீட்டறிக்கை
- பொலிஸ் அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
- பழுதுபார்ப்புச் செய்யப்பட்ட அரசாங்கத்தின் பதிவுசெய்யப்பட்ட கராஜிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு விலைகள் நியாயமானதென மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகரிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் பிரதி
- பழுதுபார்ப்பு சம்பந்தமான தங்களது பரிந்துரை

16.**(iii)** அதேபோல் விபத்து சம்பந்தமாக எனக்கும் வாகனம் சொந்தமான நிறுவனத்தின் தலைவர்/ போக்குவரத்து உத்தியோகத்தருக்கும் தாமதமின்றி அறிவிக்க வேண்டும். மேலும் அவ்வாறான விபத்துக்கள் பற்றிய தங்களுக்கும் தாமதமின்றி அறிக்கையிடுமாறு போக்குவரத்து நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கவும்.

16.**(iv)** எவ்வாறாயினும் ஒரு வீதி ஒழுங்கு மீறல் அல்லது குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் அடிப்படையில் அல்லது கடமையில் ஈடுபட்ட சாரதி நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்டு குற்றவாளியாகக் காணப்படுவாராயின், குறித்த நட்டங்களை மீள்நிரப்பல் செய்வதற்கு விண்ணப்பிக்க முன்னர் பூரண விசாரணையொன்றை நடாத்தி அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு வாகனம் சொந்தமான அமைச்சு/திணைக்களம்/கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்தல் வேண்டும். குறித்த அறிக்கையின் சிபார்சுகளின் அடிப்படையில் நட்டத்தை மீள்நிரப்பல் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும். இல. **PRE/2024/17** மற்றும் **2024.07.28** ஆம் திகதிய சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

**17. <u>தேர்தல் கடமைகளிடையே தொழில்நுட்ப கோளாறுகளுக்கு உள்ளாகும் அரச வாகனங்கள்.</u>**

17.**(i)** தேர்தல் கடமைகளுக்கு ஈடுபடுத்திக்கொள்ளும் பொருட்டு அழைக்கப்பட்ட **அரச** வாகனமொன்று அல்லது உத்தியோகத்தர்களினால் எடுத்துவரப்பட்ட **அரச** வாகனமொன்று தொழில்நுட்பக் கோளாறுக்கு உள்ளாகுமாயின், குறித்த வாகனத்தைத் திருத்தும்போது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்:-

1. தொழில்நுட்பக் கோளாறும் செய்யவேண்டிய திருத்தவேலையும் பற்றி மாவட்ட செயலகத்தின் மோட்டார் வாகனங்கள் பரிசோதகரின் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளல். (அவ்வாறு இல்லாதவிடத்து இயந்திரவியல் பொறியியலாளரின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.) இங்கு குறித்த கோளாறு திடீரென ஏற்பட்ட ஒரு நிலைமை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.
2. அரச வாகனங்களைப் பராமரித்தல் என்ற தலைப்புடன் **2016.12.29** ஆந் திகதி வெளியிடப்பட்ட **30/2016** ஆம் இலக்க பொதுநிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றப்படுதல் வேண்டும்.
3. அதன்போது பெற்றுக்கொள்ளும் விலைகள் குறித்து மோட்டார் போக்குவரத்து பரிசோதகரினதும் பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் சிபார்சுகளுடனும் தாமதமின்றி **0112885228** ஆகிய தொலைநகல் (பெக்ஸ்) இலங்கத்தின் மூலம் உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு (நிருவாகம்) அனுப்பிவைத்து எனது அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்.

17.**(ii)** எனது அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர் திருத்த வேலையை மேற்கொண்டு அது குறித்து மோட்டார் வாகன போக்குவரத்துப் பரிசோதகரின் அறிக்கையுடன் இறுதி விலைப்பட்டியின் பிரதியொன்றுடனும், திருத்தவேலை பற்றிய சம்பந்தப்பட்ட நிறுவனத்தினால் லொக் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டதற்கான அறிக்கையும் உங்கள் சிபார்சு அறிக்கையும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்) தாமதமின்றி அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கவும். மேலதிக அறிவுறுத்தல்களுக்கு **PRE/2024/17** இலக்க, **2024.07.28** ஆந் திகதிய சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

18. 2024.09.21 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலுக்கு உரியதாக வெளியிடப்பட்டுள்ள அனைத்து போக்குவரத்துச் சுற்றறிக்கைகளையும் மாதிரிப் படிவங்களையும் தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்தும் நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை தயவுடன் கவனத்திற்கொள்ளவும்.

19. பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்ட மாதிரிப்படிவங்களை தேவையான அலுவல்களுக்காக இத்துடன் அனுப்புகின்றேன்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

**பிரதிகள்** :

| | | |
|---|---|---|
| 1. இராணுவத் தளபதி | - | தயவுடன் தகவலுக்காக. |
| 2. சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நிருவாகம் மற்றும் மத்திய மாகாண பொலிஸ் தலைமையகம்<br>3. அஞ்சல் மா அதிபர், அஞ்சல் தலைமையகம்<br>4. கணக்காய்வாளர் நாயகம் | - | தயவுடன் தகவலுக்காக. |
| 5. தலைவர், இலங்கை போக்குவரத்துச் சபை | - | இச்சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவசியமான பஸ் வண்டிகளைப் பெற்றுக் கொள்வதற்கு தயவுடன் நடவடிக்கை மேர்கொள்வகுர்காக. |
| 6. மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (தே.தே) | - | தயவுடன் தகவலுக்காக. |
| 7. மேலதிகத் தேர்தல்கள் ஆணையளர் (நிருவாகம்)<br>8. தலைமை நிதி அலுவலர்<br>9. தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் | - | தயவுடன் தகவலுக்காக. |
| 10. கணக்காளர் (பெறுகை) | - | CE-51 படிவங்கள் அந்தந்த மாவட்டங்களால் கோரப்படுகின்ற எண்ணிக்கையை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்காக. |
| 11. கணக்காளர் (கொடுப்பனவு) | - | தயவுடன் தகவலுக்காகவும் தேவையான அலுவல்களுக்காகவும் |

*இணைப்பு 01*

| தொ. இல. | மாதிரிப்படிவம் | படிவத்தின் இல. |
|---|---|---|
| 1. | வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்கு விண்ணப்பித்தல் | V-1 |
| 2. | பொது 231 எரிபொருள் கட்டளைகள் மூலம் குழாம் வாகனங்களுக்கு/ உத்தியோகத்தர்களை ஏற்றிவருவதற்காக குறித்தொதுக்கப்பட்ட வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகித்தல் (Pool Vehicles/ Assigned Vehicles) | V - 2 |
| 3. | சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் எடுத்துவரப்படும் தனிப்பட்ட வாகனங்களின் விபரங்கள் | V – 3 |
| 4. | உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் எடுத்துவரப்படும் தனிப்பட்ட வாகனங்கள் பற்றிய விபரங்கள் | V - 4 |
| 5. | உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தனிப்பட்ட சாரதியொருவரை அமர்த்திக்கொள்ளல் பற்றிய தகவல்களும் வருகைச் சான்றிதழும் | V - 5 |
| 6. | உத்தியோகபூர்வ வாகனங்களை தேர்தல் கடமைகளுக்கு எடுத்துச்செல்வதற்கு அனுமதி கோரல் பற்றிய விபரங்கள் | V - 6 |
| 7. | குழாம் வாகனங்களை தேர்தல் கடமைகளுக்காக மாவட்டத்திற்கு விடுவித்து அனுப்பிவைக்கும் தரவுப் பத்திரம் | V - 7 |
| 8. | தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படும் சாரதிகளுக்கான அறிவுறுத்தல்கள் | - |
| 9. | அரச வாகனங்களுக்கான வருகைச் சான்றிதழ் (இச்சான்றிதழை தமது மாவட்டத்திற்கு அவசியமான அளவு கணக்காளரிடமிருந்து (பெறுகை) பெற்றுக்கொள்ள வேண்டும்.) | CE – 51 |
| 10. | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு செலவான எரிபொருள் செலவுகளை மீள்நிரப்பல் செய்தல். (மீள்நிரப்பல் செய்வதற்கு உரிய முறையில் பூரணப்படுத்திய பொது 35 செலவுறுதிச்சீட்டை (வவுச்சரை) உரிய விலைப்பட்டிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.) | AV - 01 |
| 11. | தேர்தல் நடவடிக்கைகளுக்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பிவைத்த அரச வாகனங்களுக்கு (குழாம்) வழங்கிய எரிபொருள் செலவுகளை மீள்நிரப்பல் செய்வதற்கான படிவம் | PV - 01 |